பிரபல தெலுங்கு நடிகர் மகேஷ்பாபு அவர்களின் ஜாதகம் பிருகு நந்தி நாடி முறையில் ஆய்வு



| | | | |
|---|---|---|---|
| | குரு 01.07 | செவ் 02.43<br>கேது 03.26<br>மாந் 10.10 | லக் 04.39 |
| | mahesh babu actor<br>Chennai, T.N.<br><br>09-08-1975 - 02:30:00<br>வயது : 47வ-3மா-7நா ஆண்<br>வெள்ளி மகம் - 4<br>சுக்ல-துதியை - கௌலவ<br>பரிகயோகம்<br>ராகு திசை : 09-07-2019 <-> 09-07-2037<br>குரு புத்தி : 23-03-2022 <-> 17-08-2024 | | சனி 02.05<br>சூரி 22.10 |
| | | | புத 00.05<br>சந் 11.35<br>சுக்(வ) 18.03 |
| | ராகு 03.26 | | |

மிருக நந்தி நாடி முறையில் முதலில் ஒரு ஜாதகத்தை எடுத்தவுடன் குருவை எடுத்துக் கொண்டுதான் பலன்கள் சொல்ல வேண்டும் இது ஆண் ஜாதகம் என்பதால் குருவை அடிப்படையாகக் கொண்டு பார்க்க வேண்டும். இதுவே பெண் ஜாதகமாக இருந்தால் சுக்கிரனை அடிப்படையாகக் கொண்டு பார்க்க வேண்டும். எனவே இங்கு மகேஷ் பாபு அவர்கள் ஜாதகம் ஆண் ஜாதகம் என்பதால் குருவை அடிப்படையாகக் கொண்டு நம் அவரின் ஜாதகத்தின் ஆய்வை மேற்கொள்வோம்.

குரு அவரது ஜாதகத்தில் மேசத்தில் அமர்ந்துள்ளது குருவிற்கு திரிகோணத்தில் புதன் சந்திரன் சுக்கிரன் அமர்ந்துள்ளது புதன் சந்திரன் சுக்கிரன் பொதுவாக ஒருவரின் ஜாதகத்தில் அழகையும் புகழையும் தரக்கூடிய அமைப்பு தரும் இங்கு புகழை எப்படி தருகிறது என்றால் புதன் சந்திரன் சுக்கிரன் இந்த மூன்று கிரகங்களும் சூரியன் வீட்டிலிருந்து சுப கிரகங்கள் ஆகி குருவை தொடர்பு கொள்வதால் ஜீவகாரகனான குருவுக்கு இந்த மூன்று கிரகங்களின் தொடர்புகள் அழகு புகழ் மற்றும் புதன் சுக்கிரன் தொடர்பு நடிப்பு சினிமா துறையில் அவருக்கு பெரும் யோகத்தை தரக்கூடிய அமைப்பாக அமைகிறது. வாழ்நாள் முழுக்க சினிமா என்ற புகழோடும் சுக்கிரன் தொடர்பு வலிமையாக இருப்பதால் அதை மேலும் மேலும் மெருகேற்றிக் கொண்டே இருக்க வாய்ப்பு உண்டு.

அடுத்ததாக சனி அடிப்படையாகக் கொண்டு நாம் பார்த்தோம் என்றால் சனி கடகத்தில் அமர்ந்துள்ளது சனி முதலில் ராகுவோடும் அதன் பின்பு சூரியன் டும் பாகை அடிப்படையில் தொடர்பு கொள்கிறது சனி ஒருவரின் தொழில் அடையாளங்களை கூறக்கூடிய கோள் அது  செவ்வாய் வீட்டில் உள்ள ராகுவோடு தொடர்பு கொண்டதாக இருப்பதால் அடிதடி போலீஸ் ராணுவம் போன்ற துறைகளில் மூலம் நடிப்பு சார்ந்த படங்களின் மூலம் அவருக்கு புகழைக் கொண்டு வந்து சேர்த்தது.

மேலும் சனி சூரியன் சேர்க்கை இருப்பதால் தந்தையின் மூலம் திரைப்படத்திற்கு வந்தவர் சனி சூரியன் சேர்க்கை தான் செய்யக்கூடிய தொழிலில் புகழ் முதல் இடம் போன்ற செயல்கள் அவருக்கு இயற்கையாகவே அமைந்து விடும். தொழில் காரணோடு ராகு இருப்பது உச்சநிலையை அடையக்கூடிய அமைப்பை கொடுத்து விடும் அதோடு

சூரியன் தொடர்பு கொள்ளும்போது மேலும் அதை மெருகேற்றி புகழின் உச்சிக்கே கொண்டு போய் விடுகிறது.

மேலும் தான் மேற்கொள்ளும் தொழில் நடிப்பு தொழில் என்பதால் புதனையும் சுக்கிரனையும் பார்த்து தீர்மானிக்க வேண்டும். புதன் இங்கு பரிவர்த்தனைக்கு முன்பு சந்திரன் தொடர்பையும் பரிவர்த்தனைக்கு பின்பு சூரியன் தொடர்பையும் ஏற்படுத்துகிறது ஆரம்பத்தில் தொடங்கும் போது சுமாராகவும் பரிவர்த்தனைக்கு பின்பு சூரியன் தொடர்பு கொள்வது 30 வயதுக்கு மேல் நடிப்புத் துறையில் புகழ் அடையக்கூடிய வாய்ப்பை புதன் சூரியன் ஏற்படுத்திவிடுகிறது. மேலும் புதனுக்கு திரிகோணத்தில் இருக்கக்கூடிய குரு தொடர்பும் சுக்கிரன் தொடர்பும் ஏற்படுவதால் தான் எடுத்துக் கொண்ட தொழிலாளர் நடிப்புத் துறையில் ஒரு புகழான நிலையை அடைய அவருக்கு உதவுகிறது.


சுக்கிரன் சினிமா என்ற வெளிச்சத்தை அடிப்படையாகக் கொண்டு காரகத்துவத்தின் அடிப்படையில் நாம் பார்க்கும் பொழுது சுக்கிரனும் பரிவர்த்தினிக்கு பின்பு சூரியனோடு குருவோடும் புதனோடும் தொடர்பு கொள்வதால் இங்கு சினிமாவின் மூலம் புகழ் பொருளாதார நிலை நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது என்பதை சுக்கிரன் மூலம் நமக்கு உணர்த்துகிறது.

சூரியன் தந்தையை குறிக்கும் கோல் சூரியன் பரிவர்த்தினிக்கு முன்பு புதன் தொடர்பையும் பரிவர்த்தனைக்கு பின்பு சுக்கிரன் தொடர்பையும் குறிப்பிடுவதால் தந்தையும் சினிமா துறையில் பிரபலம் என்பது அனைவருக்கும் தெரியும். சூரியனோடு புதனும் சுக்கிரனும் தொடர்பு கொண்டாலும் அல்லது வக்கிர நிலையில் தொடர்பு கொண்டாலும் தந்தைக்கு இரண்டு திருமணங்களை சுட்டிக்காட்டும் திரு மகேஷ் பாபு அவர்கள் ஜாதகத்தில் அவரது தந்தைக்கு இரண்டு திருமணங்கள் நடந்தது.

சகோதரரை செவ்வாய்க் கேது ஓடும் குருவிற்கு 10 ஆம் பார்வையாக சனியோடு தொடர்பும் இருப்பதால் இவரது உடன் பிறந்த சகோதரர் சினிமா துறையிலும் திரைப்படத் தயாரிப்பு துறையிலும் பணியாற்றி வந்தார் உடல் நல கோராக் கோளாறினால் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மரணம் அடைந்தார்.

திருமணத்தைப் பற்றி பார்க்கும் போது சுக்கிரன் களஸ்திர காரகனாகிறார்

சுக்கிரன் சந்திரனோடும் புதனோடும் குருவோடும் தொடர்பு கொள்வதால் இவருக்கு காதல் திருமணம் வேறு மொழி கலாச்சாரம் உடைய பெண்ணை திருமணம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது.





இவர் குழந்தை நட்சத்திரமாக 1979 ஆம் ஆண்டு தந்தையால் அறிமுகப்படுத்தப்பட்டார் அப்போது அவருக்கு சுக்கிர திசை நடந்து கொண்டிருந்தது . சுக்கிர திசை பொதுவாக சினிமா வெளிச்சம் சினிமா போன்ற துறைகளில் பணியாற்ற வாய்ப்பு கிடைக்கும் இளம் வயதில் சுக்கிர திசை வந்ததால் இவருக்கு குழந்தை நட்சத்திரமாக நடிக்க வாய்ப்பு அமைந்தது.



திரும்பவும் 1999இல் இளம் நடிகராக முதல் முதலில் களம் இறங்கி நடித்த முதல் படத்திலே முதல் அறிமுக கதாநாயகன் என்ற பட்டத்தை தட்டி சென்றார் அன்று இவருக்கு சூரிய திசை நடந்து கொண்டிருந்தது சூரிய திசை புகழையும் அடையாளத்தையும் வெகுவிரைவில் பெற்றுக் கொடுக்கக்கூடிய கிரகம் என்பதால் அது கர்மா காரகன் தொழில் காரகனோடு சூரியன் தொடர்பு இருந்ததா சூரிய திசையில் தன் தந்தையின் தொழிலாகிய சினிமா துறையில் தானும் முத்திரை பதிக்க தொடங்கினார்.

சூரியத் திசை முடிந்து சந்திர திசையில் 2002 க்கு மேல் நடந்தது அவருக்கு மிகவும் திருப்புமுனையாக அமைந்த படம் 2003 ஆம் ஆண்டு ஒக்கடு என்ற திரைப்படம் அமைந்தது. படம் அவரை முன்னணி கதாநாயகன் அந்தஸ்துக்கு அவரை மிக விரைவில் அழைத்துச் சென்றது சந்திரன் சுக்கிரனோடு தொடர்பு கொண்டிருந்ததால் அந்த வாய்ப்பு அவருக்கு மிகப் பிரகாசமாக அமைந்தது.



அதன் பின்பு இந்த சந்திர திசையில் வந்த படங்கள் அத்தாடு போக்கிரி தூக்குடு பிசினஸ்மேன் போன்ற படங்கள் எல்லாம் பெரும் வெற்றியை அடைந்து சந்தர திசை அவருக்கு மிக புகழைத் தந்தது பொருளாதாரத்தையும் மிகப்பெரிய வெற்றி அடையச் செய்தது சந்திரன் ஒரே காரணம் சுக்கிரனோடு தொடர்பு என்பதை இங்கு சுட்டிக்காட்டுகிறது.

சந்திர திசை முப்பது வயதுக்கு முன்பு தொடங்கி இருந்தாலும் 37 வயது வரை சந்திர திசை இருந்தது சந்திரன் பரிவர்த்தனைக்கு பின்பு புதன் குரு சூரியன் சுக்கிரன் தொடர்பு இருந்தது சந்திரன் திசை பின்பகுதி மிகப்பெரிய வெற்றியை அவருக்கு வாய்ப்பாக அமைந்தது.

சந்திர திசைக்கு பின்பு வந்த செவ்வாய் திசை சில தோல்விகளையும் வழக்குகளையும் சந்திக்க நேர்ந்தது சக நடிகர்களின் உதவியாளும் அரசாங்கத்தின் உதவியாலும் அதிலிருந்து மீண்டு வந்தார் வழக்குக்கு பின்பு சில படங்கள் வெற்றியை குவித்தது. இதற்கு முக்கியமான காரணம் என்றால் இவரின் ஜாதகத்தில் செவ்வாய் கேது சேர்க்கை ஏற்பட்டு செவ்வாய் திசை நடந்ததால் செவ்வாய் திசையில் அவர் பல தோல்விகளையும் வழக்குகளையும் பிரச்சனைகளையும் சந்திக்க நேர்ந்தது.

அதன் பின்பு வந்த ராகு திசை 2019 ஆவது ஆண்டில் இருந்து நடைபெறுகிறது ராகு சனிக்கு திரிகோணத்தில் இருப்பதால் தொழிலில் நிச்சயம் வெற்றிகளை குவிக்க வாய்ப்பு உண்டு. ராகு திசை இவருக்கு வந்து தீவிரவாதத்தை அழிப்பது போலீஸ் ராணுவம் அடிதுடி போன்ற படங்கள் இவருக்கு வெற்றியை குவிக்க வாய்ப்புகளை உண்டாக்கி தரும். அதே நேரம் சனியோடு ராகு தொடர்பிருந்த திசை நடந்தால் தாய் தந்தையர்களுக்கு இறப்பு சம்பவங்கள் நடக்க வாய்ப்புகளை உண்டாக்கி தரும். 2019 ஆவது ஆண்டு தந்தையின் இரண்டாவது மனைவி இறந்தார். அதன் பின்பு 2022 ஆம் ஆண்டு சகோதரர் மரணம் அடைந்தார். 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாயார் மரணமடைந்தார். 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தந்தையார் மரணம் அடைந்தார். இப்படி தொடர்ந்து நான்கு மரணங்களை இவரது குடும்பம் சந்தித்தது என்றால் அதற்கு மிக முக்கியமான காரணம் சனிக்கு திரிகோணத்தில் அமர்ந்த ராகு திசையை காரணம். அதுமட்டுமல்லாமல் கோச்சாரத்தில் கேதுவுக்கு திரிகோணத்தில் சனி அமர்ந்ததும். சனிக்கு

திரிகோணத்தில் கேதமர்ந்ததும் ஒரு காரணம். மேலும் குரு மீது கோச்சார ராகு பயணித்த போது தான் தந்தையாரும் தாயாரையும் இழந்தார். அதேபோல கோச்சார குருவும் ராகுவுக்கு திரிகோணங்கள் அமர்ந்த போது தாய் தந்தையர் இருவரையும் இழந்தார். இங்கு கோச்சாரமும் ராகு கேதுகளோடு தொடர்பு கொண்டதாலும் திசையும் ராகு திசையாக அமர்ந்து சனிக்கு திரிகோணங்கள் அமர்ந்து நடந்தாலும் தொடர்ந்து இறப்பு சம்பவங்கள் அவரது வீட்டில் நடப்பதற்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது.

மேலும் ராகு திசையில் குரு புத்தியே நடந்ததும் ஒரு காரணம்.

நான் ஒரு சிறு குறிப்பாக தான் அவரின் ஜாதகத்தை உங்களோடு பகிர்ந்து உள்ளேன் அவரது ஜாதகத்துக்கு மட்டும் எழுதினால் நாம் ஒவ்வொரு கோச்சாரத்தையும் ஒவ்வொரு தசா புத்தியும் ஒவ்வொரு கிரகங்களையும் அவருக்கு ஒவ்வொரு ஆண்டு நடந்த சம்பவங்களோடு பொருத்தி கட்டாயம் நம் கூற முடியும் அதற்கு நேரம் நமக்கு அமையாத காரணத்தினால் ஒரு சிறு குறிப்பாக பிருகு நந்தி நாடி மூலம் எப்படி ஒரு ஜாதகத்திற்கு பலன் பார்க்க வேண்டும் என்பதை உங்களோடு நான் பகிர்ந்து உள்ளேன். மேலும் பல்வேறு ஜாதகங்களோடு உங்களை மேலும் சந்திப்பேன் .

நன்றி

**Selvam astrologer Coimbatore**

**Gemini school of astrology**

**Selvam astrologer.com**

**Call WhatsApp 9842780218**